**O.S.No.17/2021**

வா.சா.1, திரு.கர்ணன்
நாள் : 20.06.2023 நேரம் : 12.25

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1) வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் சங்கதிகளை கூறியது யார் என்றால் நான்தான். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. பிராதில் உள்ள சங்கதிகளை வழக்கறிஞர் படித்து காட்டியபின்பு தான் கையெழுத்து செய்தேன். எனது தகப்பனார் உடையானுக்கு மொத்தம் 7 பிள்ளைகள். 1.சிங்காரம், 2.கார்மேகம், 3.காளியம்மாள், 4.கர்ணன், 5.ராஜேஸ்வரி, 6.அரசு மற்றும் 7.தங்கராசு ஆகியோர் ஆவோம்.

2) இவ்வழக்கில் 2 வது வாதி பால்துரை எனது உடன்பிறந்த சகோதரர் இல்லை என்றால் இல்லை அரசுவின் பட்டப்பெயர் தான் பால்துரை ஆகும். பிராதில் அரசு என்ற பால்துரை என்று காட்டவில்லை. அரசு பெயரை மறைத்து வழக்கிற்காக பால்துரை என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் புலஎண் எனக்கு தெரியாது.

3) தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தை வழியில் பாத்தியப்பட்டது. எனது தந்தை அழகமாளிடம் இருந்து கிரையம் வாங்கினார். எனது தந்தை கிரையம் வாங்கிய தேதி எனக்கு தெரியாது. அழகமாளுக்கு அரசு ஆதிதிராவிடர் நலத்துறையில் இருந்து ஒப்படைப்பு ஆணை மூலம் வழங்கப்பட்ட இடம் என்றால் சரிதான். ந.க.அ.1:2922/76 மூலமாக 19.09.1979 ம் தேதியிட்ட உத்தரபு மூலமாக அழகமாளுக்கு அரசால் வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) அந்த ஒப்படைப்பு ஆவணத்தில் 17 நிபந்தணைக்கு உட்பட்டுதான் வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதில் 16 வது நிபந்தணை ஒப்படைப்புதாரருக்கு 30 வருடங்களுக்கு ஒப்படைப்பு பெற்ற

மனையை விற்கவோ, அடமானம் வைக்கவோ, ஒத்தி வைக்கவோ, வேறு யாருக்கும் மாற்றவோ உரிமை கிடையாது கூறியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) மேற்படி நிபந்தனையில் ஒப்படைப்பு பெற்றவர் இடத்தில் நிரந்தரமாக குடியிருக்கவில்லை என்றால் அந்த ஒப்படைப்பு ஆவணம் ரத்து செய்யப்படும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்படி அழகம்மாள் நிரந்தரமாக குடியிருக்காத காரணத்தால் விளங்குளத்தூர் குரூப் கீழகன்னிசேரி கிராமம் சர்வே எண்.35/2B-ல் கண்டுள்ள 3 செண்ட் இடத்தை முனியாண்டி மனைவி அரசம்மாள் என்பவருக்கு ந.க.அ.1: 184/2021 மனை எண் 31 யை கடந்த 16.09.2021 ம் தேதி தனிவட்டாட்சியர் ஆதிதிராவிடர் நலத்துறை அவர்கள் மூலம் அழகம்மாள் கொடுத்த ஒப்படைப்பு ஆவணத்தை ரத்து செய்து வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6) மேற்படி இடம் பிரிக்காமல் பொதுவில் இருந்து வருகிறது. பொதுவாக இருக்கும் பட்சத்தில் எனது உடன்பிறந்தவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் அவசியமான தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு ஆளாகியுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொருத்தவரையில் முனியாண்டி மனைவி அரசம்மாள் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.45.

சாட்சியின் கையொப்பம்.